10.02.2026

O.S.No.208/2012

பி.வா.சா.2.திரு.கதிரவன், த.பெ.திரு.சிங்காரவேலன்.

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**குறுக்கு விசாரணை**

**1)** எனக்கு சாட்சி அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து சம்மன் வந்ததா என்றால் இல்லை. என்னை இந்நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்ல வெள்ளைதுரை என்பவரது பேரன் பாபு (2ம் பிரதிவாதி) ஆவார். வாதியை எனக்கு 20 ஆண்டுகளாக தெரியும். நான் தாவா சொத்தின் அருகில் 20 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன் என்பவதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. நான் பல்லவராயன் பட்டியில் தாவா சொத்தின் அருகில் தான் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்துக்கள் ஆரம்பத்தில் சிறுவயல் அழக்கப்ப செட்டியார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளது சம்மந்தமாக அவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கிடை சொத்துக்கள் 1ம் பிரதிவாதி சித்தப்பா செல்லையா என்பவர் உழவடை செய்து வந்தார் என்று சொல்லுவது சம்மந்தமாக எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை உழவடை செய்து வந்தார் என்றால் தெரியாது. யாரிடம் உழவடை பேசி உழவடை செய்துவந்தார் என்றால் தெரியாது.

**2)** நிரூபண வாக்குமூலத்தில் 11.10.2010ம் தேதி 2ம் பிரதிவாதியும் 3ம் பிரதிவாதியும் தாவா சொத்துக்களை அதன் உரிமையாளரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளனர் என்று நான் சொல்லியுள்ளது சம்மந்தமாக கிரைய ஆவணங்களை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். கிரையம் பெற்றதாக சொன்னார்கள். எத்தனை வருடங்களாக தாவா சொத்துக்கள்

விவசாய நிலமாக இருந்தது என்று சொல்ல முடியுமா என்றால் தெரியாது. நான் அந்த நிலங்களை ஏர் பிடித்து 30 ஆண்டுகளாக உழுது வந்தேன் என்று சொல்வது சம்மந்தமாக ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் கூலிக்குதான் உழுது வந்தேன். கூலி வாங்கியதற்கான ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை.

3) இந்த நிரூபண வாக்குமூலத்திற்கு தகவல் நான்தான் கொடுத்தேனா என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் எந்த ஆண்டு வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்டது என்றால் தெரியாது. தாவா சொத்து இன்றைய தேதிவரை வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட வில்லை என்றாலும் விவசாய நிலமாகதான் உள்ளது என்றாலும் வழக்கிற்காக வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்டது என்று பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் பிரதிவாதி அழைத்ததன் அடிப்படையில் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.